
பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்
கொழும்பு

Registered as a News paper in Ceylon விலை சதம் 10

ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 9 [10-9-67] இதழ் 211

யாழ்ப்பாணம் பிலவங்க ஆவ. 25 ஐ. ஆகி. 5 ஞாயிற்றுக்கிழமை

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
றப்பர் வளையல்
நவீன முத்துமாலை
முடிமயிர்
ஜீவா பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# 29வது ஷரத்தை நீக்கவேண்டும்; வங்கி, தோட்டங்கள் தேசீயம்

## கூட்டாட்சியினரின் புதிய கொள்கைத் திட்டம்

### மக்கள் குழுக்களும் நிறுவப்படுமாம்

கொழும்பு, சனி

**அரசியல் அமைப்புத் திட்டத்திலுள்ள 29-வது ஷரத்து நீக்கப்படவேண்டும் என்று கூட்டாட்சிவாதிகள் வெளியிட்டுள்ள புதிய கொள்கைப் பிரகடனத்தில் தெரிவித்துள்ளனர்.**

பதினன்கு அம்சங்களைக் கொண்ட புதிய கொள்கைத் திட்டம் ஒன்றை ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி தயாரித்ததாகவும் இத்திட்டத்தை லங்காசமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் ஏற்றுக் கொண்டுவிட்டதாகவும் எனினும் சமசமாஜ கம்யூனிஸ்ட்கட்சிகளின் காரியக் கமிட்டிகள் விரைவில் இதை அங்கீகரிக்க விருப்பதாகவும் அறியப்படுகிறது.

சென்ற பொதுத் தேர்தலில் கூட்டாட்சிவாதியினர் தோல்வியடைந்த பின்னர் இப்புதிய கொள்கைத் திட்டமொன்றை உருவாக்குவதில் ஈடுபட்டிருந்தனர்.

புதிய கொள்கைப் பிரகடனத்தின்படி கூட்டாட்சிவாதியினர் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அரசியல் அமைப்புத் திட்டத்திலிருந்து 29-வது ஷரத்து நீக்கப்படும். வங்கிகள், தோட்டங்கள், ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் ஆகியவை தேசியமயமாக்கப்படும். இதற்குப்பதிலாக அரசாங்க வர்த்தக கம்பனியொன்று நிறுவப்படும்.

அரசாங்க நிர்வாகத்தைச் சுலபமாக்க "மக்கள் குழுக்கள்" நியமிக்கப்படும்.

பொருளாதாரம், அரசியலமைப்பு, அரசாங்க நிர்வாகம், பாதுகாப்பு வெளிவிவகாரம், மொழி, கலாசாரம், காணி, தொழில், வீடமைப்பு, சுகாதாரம், சமூகம் ஆகிய பல்வேறு துறைகள் சம்பந்தமாகவும் புதிய கொள்கைப் பிரகடனத்தில் மூன்றுகட்சியினரும் தங்கள் கொள்கையைத் தெரிவித்துள்ளனர்.

## சிறுபான்மைத் தமிழர் பிரச்னைகள்: யாழ். செயலகத்தில் இன்று மாநாடு

யாழ்ப்பாணம், ஞாயிறு

சிறுபான்மை தமிழ்மக்களின் பிரச்னைகள் சம்பந்தமான முடிவுகளை ஆராயும் பொருட்டு உயர்தர மகாநாடொன்று இன்று மாலை 2-30மணிக்கு யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நடைபெறவிருக்கின்றது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா, வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் ஆகியோர் முக்கியமாகக் கலந்துகொள்ளும் இம் மகாநாட்டுக்கு யாழ். மாவட்டக் காரியாதிகாரிகளும், வடபகுதி எம். பி.க்களும், செனட்டரும், பொலிஸ் அதிகாரிகளும், கோவில் நிர்வாகிகளும், பத்திரிகையாளர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக அண்மையில் கோவில் நிர்வாகிகள் சிலர் தெரிவித்த முடிவு பற்றியும், சட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் இம் மகாநாட்டில் ஆராயப்படவிருப்பதாகத் தெரிகின்றது. கோவில்களில் அசம்பாவிதங்கள் ஏற்படாமல் அமைதியை நிலைநாட்ட நிரந்தர பொலிஸ்பாதுகாப்பு அளிக்க முடியுமா என்ற தீர்க்கமான முடிவையும், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் முடிவிற்கிணங்க வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் இம் மகாநாட்டில் தெரிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. [ந. நி]

## சங்கானையில் மீண்டும் சமரச மகாநாடு

யாழ்ப்பாணம், சனி

சங்கானையில் நடைபெற்ற கலவரங்கள் சம்பந்தமாக இன்றுகாலை யாழ்ப்பாணம் பொலிஸ் அதிபர் காரியாலயத்தில் ஒரு மகாநாடு நடைபெற்றது.

மாநாடு கூட்ட வேண்டிய தன் அத்தியாவசியத்தையும் நோக்கத்தையும் யாழ் பொலிஸ் அதிபர் திரு. ஆர் சுந்தரலிங்கம் தெளிவுபடுத்தினர். மகாநாட்டில சங்கானை பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம், சங்கானைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சி. டயஸ். திருவாளர்கள் எம். சி. சுப்பிரமணியம், அ. இ. செல்லம், எஸ். நடேசன், வி. செந்திநாதன், என். ரி. செல்லத்துரை, எஸ். நாகலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

## அக். 15-க்கு முன் விதைநெல் கோரவேண்டும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

எதிர்வரும் காலபோகத்துக்கு யாழ். மாவட்ட கமக்காரர்கள் நெல்விளைவிப்பதற்கான விதை நெல்களை அரசாங்கத்திடமிருந்து பெற வேண்டுமானுல் அக்டோபர் மாதம் 15-ம் திகதிக்கு தங்கள் பல நோக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விண்ணப்பிக்கவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்றுக்காலை யாழ்ப்பாணம் காரியாதிகாரி அலுவலகத்தில் நடைபெற்ற உணவு உற்பத்தி சம்பந்தமான மகாநாட்டின் பின்னரே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் தலைமையில் இம்மகாநாடு நடைபெற்றது.

நெல்விளைச்சலை வடபகுதியிலுள்ள பாடசாலைகளிலும் உண்டுபண்ணுவது பற்றியும், மேலும் இங்கு உருளைக்கிழங்கு, வெண்காயம், மிளகாய் ஆகியன உற்பத்தி செய்ய கல்வி இலாகாமூலம் ஊக்கமளிப்பதுபற்றியும் ஆராயப்பட்டது.

புதிய விவசாய கடன் திட்டத்தின்கீழ் பசளை, நெல் ஆகியன வழங்குவது பற்றியும், இங்கு ஆராயப்பட்ட

(6-ம் பக்கம் பார்க்க)

## கல்விப் புனரமைப்பு இன்று ஆராய்வர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அரசாங்கத்தின் கல்விப் புனரமைப்புத் திட்டம் பற்றி ஆராயுமுகமாக இன்று காலை வடபகுதி வித்தியாதிபதி அலுவலகத்தில் மகாநாடொன்று நடைபெறவிருக்கின்றது. வடமாநில வித்தியாதிபதி திருமதி ஆர். ஆர். நவரத்தினம் தலைமையில் நடைபெறவிருக்கும் இம்மகாநாட்டில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளவிருக்கிறார்கள்.

புதிய கல்விப் புனரமைப்புத் திட்டத்தால் யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் தரம் குறையலாம் என்றும், இத்திட்டத்தை வடபகுதியில் புகுத்த வேண்டாமென்றும் தமிழ் எம். பி.க்கள் கல்வி அமைச்சைக் கோரும் தீர்மானம்பற்றி இம்மகாநாட்டில் முக்கியமாக ஆராயப்படுமெனத் தெரிகின்றது. இத்திட்டம் வடபகுதிக் கல்வித் தராதரத்தைக் குறைக்கவென்றே வகுக்கப்பட்டது என்று ஏற்கனவே பல தமிழ் எம். பிக்களும் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

தமிழாசிரியர்களின் 12 அம்சக் கோரிக்கைகள், இடமாற்றப் பிரச்னைகள் ஆகியனபற்றியும் இங்கு ஆராயப்படலாம் எனத் தெரிகின்றது. [ந. நி.]

எம். ஜி. ஆர். — எம். ஆர். ராதா வழக்கு

## 'என் முடிவில்' இருப்பது ராதாவின் கையொப்பம்தான்

### கையெழுத்து நிபுணர் சாட்சியம்

### "எம். ஜி. ஆர் வாக்குமூலத்தைத் தொடர்ந்தே ராதாவைக் கைதுசெய்தேன்"

—பொலிஸ் இன்ஸ்பெக்டர்.

சென்னை, செப் 9

எம். ஜி. ஆர். எம். ஆர். ராதா வழக்கு சென்னைசெசன்ஸ் கோர்ட்டில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்பின் ராதா, பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரிடம் ஒப்படைத்ததாகத் தெரிவிக்கப்பட்ட 'என் முடிவு' என்ற தலைப்பிலமைந்த கடிதம் சம்பந்தமாக ராதா தரப்பு வழக்கறிஞரான திரு. என். ரி. வானமாமலை கையெழுத்து நிபுணரான

[6-ம் பக்கம் பார்க்க]

கைதவறிய பொருட்கள்

யாழ்ப்பாணம் மிட்டாய்க் கடைச் சந்திக்கும் வின்ஸர் சந்திக்கும் இடையில் உள்ள "கலை ஞானி" படப்பிடிப்பாளர் ஸ்தாபனத்தின்முன் கண்டெடுக்கப்பட்ட ஓர் காக்கிப் பையும், ரொக்கப்பணமும் சில முக்கிய குறிப்புகளும் எமது ஸ்தாபனத்தில் உள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி உடன் மேற்படி பொருட்களை ஸ்தாபன உரிமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளவும்.

இப்படிக்கு
அ. செல்வரத்தினம்
[தியாகன்]

விலாசம்
"கலைஞானி"
11/7 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

241

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

அகங்காரமே அழிவின் அறிகுறி. அரக்கர்கள் மகாபலசாலிகளாகவும் இருந்தும் அவர்களை அழித்ததும் "நான்" என்ற அகங்காரமே. அகங்காரம் மனிதனின் அழிவின் அத்திபாரம்.

— சுவாமிசிவானந்தர்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஹு
ஆவணி ᾱ 25 வ(10-9-67)


## கொள்கைப் பிரகடனம்

முன்பு ஆட்சிபீடத்திலிருந்த, இன்று பிரதான எதிர்க்கட்சியாக விளங்கும் (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, [மாஸ்கோ] கம்யூனிஸ்ட் கட்சி) ஆகிய கூட்டு முன்னணியினர் தங்கள் புதியகொள்கைப் பிரகடனம் ஒன்றைவெளியிட்டுள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது. பதின்மூன்று அம்சங்களைக் கொண்டதாக இப்புதிய திட்டம் விளங்குகிறது. அரசியல், சமூகம், வர்த்தகம் ஆகிய துறைகளில் தாங்கள் மேற்கொள்ளவிருக்கும் திட்டம்பற்றி அந்தப் பிரகடனத்தில் விளக்கப்பட்டுள்ளது. இவைபற்றி இப்போது நாம் விரிவாக ஆராய விரும்பவில்லை. ஆனால் அரசியல் அமைப்பிலுள்ள 29-வது ஷரத்தை நீக்க வேண்டுமென்பது புதிய கொள்கைகளில் ஒன்றாகப் பிரகடனப்படுத்தப் பட்டிருப்பதுதான், சிந்திக்க வேண்டிய விஷயமாகவிருக்கிறது.

அரசியல் அமைப்பில் 29-வது ஷரத்துத்தான் இந்நாட்டிலுள்ள சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பளிக்கும் ஒரேயொரு அம்சமாகும். இந்த 29-வது ஷரத்து இருந்தும்கூட இந்நாட்டில் வாழும் சிறுபான்மையினத்தவர் தங்கள் உரிமைகள் பலவற்றை இழந்து பலபல கஷ்டங்களையும் தொல்லைகளையும் அனுபவித்து வருகின்றனர். இந்நிலையில் 29-வது ஷரத்தையும் அரசியல் அமைப்பிலிருந்து அகற்றுவதென்றால் இந்நாட்டில் சிறுபான்மை இனத்தவரின் நிலை என்னவாகும்?

சிறுபான்மை இனத்தவரின் ஒத்துழைப்பும் உதவியுமில்லாமல் இந்நாடு முன்னேற முடியாதென்பதை எதிர்க்கட்சியினரி உணராதவர்களல்லர். இதை நன்கு தெரிந்திருந்தும் சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு ஓரளவாவது பாதுகாப்பளிக்கும் 29-வது ஷரத்தை நீக்க வேண்டுமெனக் கூறுவது ஏன்? இதை நீக்கிவிட்டு வேறு எந்த வழியில் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கப் போகிறார்கள்?

சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் என்ற பேதமில்லாமல் சகல மக்களும் சம உரிமையுடன் வாழ்வதற்கு அவர்கள் தங்கள் கொள்கைப் பிரகடனத்தில் எதையும் வெளியிட்டிருந்தால் இதுயற்றிக் கவலைப்பட இடமில்லை. புதிய கொள்கைப் பிரகடனத்துக்கு இப்போது என்ன அவசியமோ அவசரமோ தெரியவில்லை. எதற்கும் சிறுபான்மையினரின் உரிமைகளுக்குப் பாதுகாப்பளிக்கும்விஷயத்தில் தங்கள் கொள்கையைத் தெளிவாக்குவது அல்லது திருத்திக் கொள்வது நல்லது.

## திரு. இராசதுரைக்கு வரவேற்பு

### யாழ்ப்பாணத்தில் அளிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு வாலிப முன்னணித் தலைவரும், மட்டக்களப்பு எம். பியுமான திரு. செ. இராசதுரைக்கு யாழ்ப்பாணத்தில் ஒரு பொதுவரவேற்பு அளிக்கப்படவுள்ளது.

திரு. இராசதுரை, மட்டக்களப்பு மாநகரசபைத் தலைவரானதைத் தொடர்ந்து அவருக்கு இங்கு பொது வரவேற்பொன்று அளிக்க யாழ்ப்பாணம் தமிழரசுக் கட்சி வாலிப முன்னணிக் கிளை முடிவு செய்துள்ளது. இப்பொது வரவேற்பில் கலந்துகொள்ள பிரஸ்தாப கிளையின்வேண்டுகோளை ஏற்று திரு. இராசதுரை இங்கு வருவாரென நம்பப்படுகிறது.

இப்பொதுவரவேற்பு இம் மாதம் 25-ம் திகதி யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. [வி. நி.]

## பாடசாலைகளில் சேர்க்கும் வயது

கொழும்பு, சனி

நான்கு வயது பதினொரு மாதம் நிறைவெய்திய பிள்ளைகளை ஆரம்ப பாடசாலைகளில் அனுமதிக்கும்படி கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை கட்டளையிட்டுள்ளார்.

ஐந்து வயது நிரம்பிய பிள்ளைகளே இதுவரை ஆரம்ப பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்டுவந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு மாத வித்தியாசத்தினால் தமது பிள்ளைகளை பாடசாலைகளில் சேர்க்க முடியாது போய்விட்டதாக பல பெற்றோர்கள் செய்துகொண்ட முறைப்பாட்டைத்தொடர்ந்தே அமைச்சர் இவ்வித கட்டளை பிறப்பித்துள்ளதாக அறியப்படுகிறது.

## தியேட்டர் சண்டையில் ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நேற்றிரவு யாழ்ப்பாணத்திலுள்ள தியேட்டர் ஒன்றில் நடைபெற்ற கைகலப்பொன்றில் வாலிபர் ஒருவர் படுகாயத்துக்குள்ளானார். இச்சம்பவம் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு அருகாமையிலுள்ள தியேட்டர் ஒன்றில் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயங்களுக்குள்ளான ஆசாரி சாந்தலிங்கம் [24 வயது] என்பவர் இந்தத் தியேட்டருக்குப்படம்பார்க்கப்போனதாகவும், அங்கிருந்த வாங்கொன்றில் இவர் படுத்ததாகவும், அப்போது அங்கு கடமையாற்றிய ஒருவருக்கும் இவருக்குமிடையிலேற்பட்ட வாய்ச் சண்டை, கைகலப்பில் முடிந்ததாகவும் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் வைத்திலிங்கம் என்பவரைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர். [ந. நி.]

# ரூ. 10,000 பெறுமதியான கராம்பு, பாக்கு அகப்பட்டன

## கடத்தப்பட இருந்ததாக பொலிசார் சந்தேகம்

வல்வெட்டித்துறை, சனி

வல்வெட்டித்துறைப் பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து இன்ஸ்பெக்டர் திரு. சி. எல். விஜயதிலகா சார்ஜன்ட் திரு. எம். துரைசிங்கம் ஆகியோரைக் கொண்ட பொலிஸ் கோஷ்டியொன்று வல்வெட்டித்துறை கொத்தியால் கடற்கரையில் ஒரு வீட்டைச் சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டபோது 10,000ரூபா பெறுமதியான 33கராம்பு மூடைகளும், 28 பாக்குமூடைகளும் 6 சாதிக்காய் மூடைகளும் இருக்கக் கண்டு அவற்றைக் கைப்பற்றியது. இவையாவும் இலங்கையிலிருந்து இந்தியாவிற்குக் களவாகக் கடத்தல் செய்வதற்கு வைக்கப்பட்டிருந்தவையெனப் பொலிசார் கருதுகின்றனர்.

பிரஸ்தாப வீட்டிலிருந்த பெண்ணைக் கைது செய்த பொலிசார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர்.

# அமெரிக்க யூ - 2 வேவு விமானம் சீனாவில் சுட்டு வீழ்த்தப்பட்டது

பீகிங், செப், 9

போர்மோஸா விமானியினால் செலுத்தப்பட்ட அமெரிக்க யூ—2 வேவு பார்க்கும் விமானமொன்று சீனப் பிரதேசத்தில் சுட்டு வீழ்த்தப்பட்டதாகச் சீனா தெரிவித்துள்ளது.

இதற்கிடையில பீகிங்கிலிருந்து ஹொங்கொங் வரும் பிரயாணிகளின் செய்திகளின்படி, குவாண்டுங் மாகாணத்தை மா-சே-துங் பொறுப்பேற்றுள்ளதாகத் தெரிகிறது.

### சுட்டுக்கொல்ல உத்தரவு

குவாண்டுங்கில், ரயில் சேவைகளைக் குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் எந்த ஒரு நபரையும் சுட்டுக்கொல்லுமாறு மா-சே-துங் உத்தரவிட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

கான்டன் வானொலி, கான்டனில் கலகங்கள் நடைபெறுகின்றன என்பதையும், அங்கு ரயில் சேவைகள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் ஒப்புக்கொண்டுள்ளது. ஆனால், இவற்றுக்கெல்லாம் காரணமாக மா எதிர்ப்பாளரையே அது சுட்டிக்காட்டியுள்ளது

### ஆசிரியருக்குக் கடிதங்கள்

## வழக்கறிஞர் கட்டணம்

வழக்கறிஞர்களுடைய வழக்கு சம்பந்தமான கட்டணம் அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படல்வேண்டுமென பாராளுமன்றத்தில் ஒரு பிரபல வழக்கறிஞர் குறிப்பிட்டார். இது வரவேற்கப்பட வேண்டிய தொன்றாகும். வழக்கு கெடுபிடியால் பொதுமக்கள் தங்கள் நேரத்தையும் பெருந்தொகையான பணத்தையும் செலவுசெய்கின்றனர். இதுபற்றிஅரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்குமா?

இ. பொ. கந்தசாமி, சங்கானை

## கொள்கை என்ன?

தமிழ் பகுதிகளிலுள்ள ஸ்தல ஸ்தாபன மன்றங்களுக்கு மந்திரி திரு. எம். திருச்செல்வம் கூடிய பணஉதவி செய்துவருவதாக பாராளுமன்றத்தில் டாக்டர் என். எம். பெரேராவும், பதுளை சுதந்திரக்கட்சி அங்கத்தவர் திரு. எச். பண்டாரவும் கூறியிருந்தார்கள். இவர்களுடைய கருத்து அப்படியாயின் டாக்டர் என். எம். பெரேரா யாழ்ப்பாணம் மாநகர சபை கலைக்கப்பட்டதுபற்றி ஏன் அக்கறை எடுக்கவேண்டும்? ஒரு சமூகத்தவரின் வளர்ச்சியில் இரு கொள்கையா அல்லது அரசியல் நோக்கமா என்பது புலப்படவில்லை.

சி: கந்தையா
யாழ்ப்பாணம்.

## தமிழ்த் தொண்டர்கள்

மிகவும் பழையகாலம் தொடக்கம் இன்றுவரை மக்கள் தமிழ்த் தொண்டரைப் போற்றிவருகிறார்கள்.

நிற்க, திரு. ந. சி. கந்தையாபிள்ளை என்பவர் பல நூல்கள் கட்டுரைகள் எழுதித் தமிழ் மக்களுக்குத் தொண்டாற்றியுள்ளார். கடந்த 30 வருடமாக இவருடைய தொண்டினைக் கவனித்துவந்திருக்கிறேன். இவரை இங்குள்ள தமிழர்கள் பாராட்டாமலிருப்பது ஏனென்று எனக்கு விளங்கவில்லை. நீங்கள் இதற்கு ஆவன செய்ய வேண்டுமென வேண்டுகிறேன்.

நா.ப. பாலச்சந்திரன்

## கமிஷன் கதி

யாழ். மாநகரசபை தேர்தல் மார்ட்டின் கமிஷன் சிபார்சில் நடைபெறவேண்டும். அல்லது புதிய முறையில் வட்டாரங்கள் பிரிக்கப்பட்ட பின்னரே நடைபெறவேண்டும். மீண்டும் பழைய முறையில் தேர்தல் நடத்துவதானால் மார்ட்டின் கமிஷன் கதி என்ன?

சி. பொன்னையா
சுழிபுரம்.

# ஐயாறன் எழுதுவது

மாணிக்கவாசகர் குருபூசையன்று மதுரையிலிருந்தேன். அங்கிருந்து திருவாதவூர் சுமார் 15 மைல்தான். பஸ்ஸுகள் அடிக்கடி செல்லுகின்றன. மதுரை திருஞான சம்பந்தர் ஆதீன மடத்திலுள்ள ஓதுவாமூர்த்திகள், திருவாதவூருக்கு என்னையும் அழைத்துச் சென்றனர். திருப்பனந்தாள் ஆதீனத்தார், திருவாதவூரில் இக் குருபூசையன்று விசேஷ கூட்டமும், திருவிழாவும் அன்னம் பாலிப்பும் பலவருடங்களாக நடத்தி வருகின்றனராம். மதுரை கோவில் பிரதம குருக்கள் ஸ்ரீ சுந்தரேச பட்டரே இதற்குப் பொறுப்பாக இருந்து, ஓதுவா மூர்த்திகளை அழைத்திருந்தார்.

காலை சுமார் 9 மணிக்கு திருவாதவூர் கோவிலை அடைந்தோம். ஸ்ரீ மாணிக்கவாசகர் விக்ரகத்துக்கு அபிஷேகம் செய்து, மந்திரியைப் போல் அலங்கரித்து கோயில் முன்பாக வைத்திருந்தார்கள். கோவிலின் முன் புறத்தில் இரு பெரிய மகிழம்பூ மரங்களுள்ளன. வயது பல நூற்றாண்டுகளாகியிருக்க வேண்டும். மணிவாசகர் வழிபட்ட அந்த இடத்தில் கால்வைத்து நடக்கவும் கூச்சமாக இருந்தது. கோவிலுக்குள்ளாக தென் மேற்குப் பகுதியில் மாணிவாசகருக்காகத் தனிக் கோவில் கட்டியுள்ளனர். சுவாமிக்கு பூசை முடிந்தபின் மாணிக்கவாசகருக்கும் பூசை நடந்தது. அலங்கரிக்கப்பட்ட விக்கிரகத்தை கோவிலிலிருந்து சுமார் 4 பர்லாங் தூரத்திலுள்ள மாணிக்கவாசகர் பிறந்த இடத்துக்கு மஞ்சத்தில் ஊர்வலமாக கொண்டு சென்றனர். ஓதுவா மூர்த்திகள் திருவாசகத்தை இனிமையாகப் பாடிக்கொண்டு வந்தனர். பிறந்த இடத்திலும் மாணிக்கவாசகருக்குக் கோவில் கட்டி அங்கும் பந்தல் போட்டு குருபூசை நடத்த ஏற்பாடு செய்திருந்தனர்.

அங்கு பூசை நடந்தபின் மீண்டும் ஊர்வலமாககோவிலுக்கு வந்தோம். கூட்டம் நடந்தது. மாணிவாசகரையும் திருவாசகத்தைப் பற்றியும் பலர் பேசினர். பேசியவருக்கு திருப்பனந்தாள் ஆதீனத்தின் சார்பாக, மாலைக்குமதிப்பாகஅங்கவஸ்திரம் அணிவித்தனர். சற்றும் எதிர்பாராதமுறையில் என்னையும் பேசச் சொன்னார்கள். ஈழத்திலிருந்து வந்திருப்பதாக என்னை சுந்தரேச பட்டரவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்.

என்ன பேசுவது? திருப்பெருந்துறை என்பது திருக்கேதீச்சரம் தான் என்றுள்ள கருத்தைப் பற்றி அத்தாட்சிகளுடன்கூறி, இதைப் பற்றி சைவ அறிஞர்கள் ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். பலரும் ஊக்கத்துடன் கேட்டனர். இதில் உண்மை இருக்கலாமென்று ஒரு சைவப் பெரியார் கூறினார். ஞானியார் சுவாமிகளும் திருக்கேதீச்சரம் தான் திருப்பெருந்துறை என்ற கருத்தைத் தெரிவித்துள்ளதாக அவரது மாணவரும் இப்போது மடாதிபதியாக உள்ளவருமான ஒரு பெரியார் என்னிடம் தெரிவித்தார். இப்போதுள்ள திருப்பெருந்துறை, கிழக்குக் கரையிலுள்ளதாகவும், அரபுக்குதிரைகள் மேற்குக் கரைக்கேவந்திருக்கவேண்டுமென்றும் அது திருக்கேதீச்சாரமாகத்தான் இருக்க வேண்டுமென்றும் இங்கு

[4-ம் கலம் பார்க்க]

(5-ம் கலத் தொடர்ச்சி)

சில கல்விமான்கள் கருத்துத் தெரிவித்ததை அறிய மிக மகிழ்ச்சியாக இருந்தது.

திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் இதைக் கேட்டுவிட்டு, "உங்களுக்குப் பேச இடம் கொடுத்தால், எங்கள் திருப்பெருந்துறையையே ஈழத்துக்குக் கொண்டு போகப் பார்க்கிறீர்களே" என்று சிரித்துக் கொண்டே சொன்னார். பாவம் அவருக்குக் கண் பார்வை சற்றே பாதிக்கப்பட்டுள்ளது. என்றாலும் மனமகிழ்ச்சியுடனேயே உள்ளார். ஈழத்துக்கு வர ஆவல் தெரிவித்தார். வண்டோதரிக்கு அருள் செய்த திருப்பெருந்துறை, ஈழத்திலுள்ள திருக்கேதீச்சரம் தான்என்ற கருத்தை அங்கு தெரிவித்துவிட்டு வந்தேன். தமிழக தினசரிப் பத்திரிகைகளிலும் இச் செய்தி முதல் முதல் வெளியாகி, பல அறிஞர்களின் கவனத்தையும் சிந்தனையையும் தூண்டியுள்ளதாக அறிய மகிழ்ச்சியாக இருந்தது.

இக் கருத்து உறுதிப்பட்டால் அது ஈழத்துக்கும் சிறப்பாக நம் திருக்கேதீச்சரத்துக்கும் எவ்வளவு நன்மையாக இருக்கும்! எல்லாம் திருவருள் செயல்.

ஃ ஃ

மூவரென இருவரென
முக்கண் உடைமூர்த்தி
மாவின் கனி தூங்கும்
பொழில் மாதோட்ட
நன்நகரில்
பாவம் வினை அறுப்பார்
பயில் பாலாவியின்
கரைமேல்
தேவன் எனை ஆள்வான்
திருக்கேதீச்சரத்தானே.

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய - சீனத் துருப்புகள் மோதல்

## சீனச் சிப்பாய்கள் முதலில் இந்தியர்மீது சுட்டனராம்

புதுடில்லி, செப்டம்பர் 9

**இந்திய பந்தோபஸ்து படையினருக்கும் சீனச் சிப்பாய்களுக்குமிடையே கடந்த வியாழனன்று சிக்கிம்-திபெத்எல்லையில் கைகலப்பு நிகழ்ந்ததாக இந்திய பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் இங்கு அறிவித்துள்ளார்**

சிக்கிம் எல்லைக்குள், இந்திய பந்தோபஸ்து படையினர் ஒரு வேலியை அமைத்துக் கொண்டிருக்கையில், சுமார் 60 சீனச் சிப்பாய்கள் வந்து வேலியை அமைக்க விடாது தடுக்க முயன்றதாக அவர் கூறினார். சீனச் சிப்பாய்கள் ஒரு சுற்றுச் சுட்டார்கள். ஆனால் ஆட்சேதம் எதுவும் ஏற்படவில்லை.

பின்னர் இந்தியப்படையினர் எச்சரித்ததைத்தொடர்ந்து சீனச் சிப்பாய்கள் தமது பக்கத்துக்கு வாபஸ்பெற்றுக்கொண்டார்கள். இந்தியப்படையினர் தொடர்ந்து வேலியை அமைத்து முடித்துக்கொண்டனர்.

### ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள்

அண்மையில் சீனச் சிப்பாய்கள் இந்தியத் துருப்பினருக்கு ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரி கூறினார்.

சென்ற புதன்கிழமையும் சுமார் 70 சீனச் சிப்பாய்கள் சிக்கிம் எல்லைக்குள் வந்து இந்திய பந்தோபஸ்து படையினரைப் பார்த்து, ரோந்து சுற்றுகளை நிறுத்துமாறு கூச்சலிட்டனர். ஆனால் இந்த நடவடிக்கையால் தாம் ஆத்திரமூட்டப்படுவதைத் தவிர்த்துக்கொண்ட இந்தியப் படையினர், சீனச் சிப்பாய்களை அவ்விடத்தைவிட்டுச் செல்லுமாறு உறுதியான எச்சரிக்கை விடுத்தனர். இதைத் தொடர்ந்து சீனர் பின்வாங்கிச் சென்றனர்.

### அண்மையில் சம்பவங்கள்

சிக்கிம் எல்லைக்கு மிக அருகே சீனச் சிப்பாய்கள் வந்து பாதுகாப்பு நிலைகளை அமைப்பதும், இந்தியப் படையினருக்கு ஆத்திரமூட்டும் வகையில் நடந்துகொள்வதும், எல்லையின் இந்தியப் பக்கத்திலுள்ள பாதுகாப்பு நிலைகளை அவதானிப்பதும் அண்மைக் காலத்தில் அதிகமாகியிருப்பதாக இந்திய பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி மேலும் கூறினார்.

சிலசந்தர்ப்பங்களில் சீனச் சிப்பாய்கள் சிக்கிம் எல்லைக்குள் சில கஜ தூரம் வந்ததாகவும், ஆனால் இந்தியப் படையினரின் எச்சரிக்கையை அடுத்துப் பின்வாங்கிச்சென்றதாகவும் அவர் தெரிவித்தார்.

## தென் அரபிய சமஷ்டி

### சண்டை நின்றது

ஏடம், செப். 9

தென்அரபிய சமஷ்டியில் உள்ள இரு தேசிய ஸ்தாபனங்களான புளொசியும், தேசிய விடுதலை முன்னணியும் தமதுசண்டையைநிறுத்திக்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று, ஏடன் தெருக்களில் நூற்றுக் கணக்கான அரபுமக்கள், இரு தேசிய ஸ்தாபனங்களையும் ஒற்றுமைப்படும்படி ஆர்ப்பாட்டம் செய்தனர். 'அரபு இரத்தம் சிந்தவேண்டாம்', 'புளொஸி — தேசிய விடுதலை முன்னணி, ஒன்றுபடுங்கள்!' என்ற கோஷங்களை ஆர்ப்பாட்டக்காரர் கிளப்பினர்.

இதற்கிடையில், ஐக்கிய அரபுக்குடியரசின் ஆதரவு பெற்ற தேசிய ஸ்தாபனமான புளொஸியின் பேச்சாளர் ஒருவர், சண்டையிடுவதை நிறுத்துமாறு தமது ஸ்தாபனத்துக்கு உத்தரவிட்டிருப்பதாகக் கெய்ரோவில் தெரிவித்துள்ளார்.

## இந்திரா காந்திக்கு சிக்கிம் தம்பதிகள் விருந்து

புதுடில்லி, செப். 9

சிக்கிம் மன்னர் தம்பதிகள் நேற்றுப் புதுடில்லியில், இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியை கௌரவிக்குமுகமாக விருந்துபசாரம் ஒன்றை நிகழ்த்தினார்கள்.

முன்னதாக இந்திய முப்படைத்தளபதிகளும் சிக்கிம் மன்னர் தம்பதிகளைச் சந்தித்தனர்.

## மொழிப் பிரச்னை பற்றி திரு. சவான்

பம்பாய், செப். 9

கல்வி மொழி, மக்கள் பேசும் மொழியாகவே அமையவேண்டும் என இந்திய உள்துறை மந்திரி திரு. சவான், இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஒரு குழந்தையின் தாய் மொழியே அதன் கல்வியின் எல்லாக் கட்டங்களிலும் போதனா மொழியாக இருக்கவேண்டியதன் அவசியம், நல்ல கல்வித் திட்டத்தின் ஓர் அடிப்படை அம்சமாகும் என்று திரு. சவான் மேலும் கூறினார்.

### தேசிய உணர்ச்சிக்கு முரணானது

மனம் இருந்தால், எல்லாத்துறைகளிலுமே மக்கள் பிராந்திய மொழிகளின் மூலமே அறிவுபெற முடியுமென்றும், ஆங்கிலமே தொடர்ந்து நாட்டின் இணைப்பு மொழியாக நீடிக்க வேண்டுமென்று கூறுவது, தேசிய உணர்ச்சிக்கு முரண்பாடானது என்றும் திரு. சவான் கூறினார்.

## இஸ்ரேலிய விமானங்கள் அத்துமீறியதாக எகிப்துபுகார்

கெய்ரோ, செப். 9

மூன்று இஸ்ரேலிய விமானங்கள் ஐ. அ. கு. பிரதேசத்தில் அத்துமீறிப் பிரவேசிக்க முயன்றதாகவும், ஆனால், தமது விமானங்கள் அவற்றை விரட்டிவிட்டதாகவும் ஐ. அ. கு. புகார் செய்துள்ளது.

இதற்கிடையில், நேற்றுக் கெயிரோ வந்து, ஐ. அ. கு. உதவி வெளியுறவு மந்திரியுடன் பேச்சுகள் நடாத்திய ஐ. நா. போரீ ஓய்வுக் கமிஷன் தலைவர் ஜெனரல் புல், ஜெரூசலம் திரும்பியுள்ளார்.

### மொண்டரீல்

## சர்வதேச பொருட்காட்சியில் இந்திய கைத்தறித் துணிக்கு கிராக்கி

புதுடில்லி, செப். 9

மொண்ட்ரீலில் நடைபெறும் 'எக்ஸ்போ—67' சர்வதேச பொருட்காட்சியில் இந்தியக்காட்சி அறையில் வைக்கப்பட்ட இந்திய கைத்தறித் துணிகளின் விற்பனை. இப்போது ரூ. 5 லட்சத்தைத் தாண்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஊக்கமளிக்கும் விற்பனையால் உந்தப்பட்ட இந்திய கைத்தறிக் கூட்டுத்தாபனம், மொண்ட்ரீலில் பல சில்லறைக் கடைகளைத் திறக்க உத்தேசித்துள்ளது.

நவம்பர்மாதத்தில், பாரிசிலும் ஒருகைத்தறித்துணிச் சில்லறைக் கடையையும், மொத்த விற்பனவு நிலையத்தையும் திறப்பதெனக் கூட்டுத்தாபனம் திட்டமிட்டுள்ளது. படிப்படியாக, மற்றும் தலைநகர்களிலும் விற்பனவு நிலையங்களைக் கூட்டுத்தாபனம் திறக்கும்.

## மதபேதமின்றி வாழுமாறு காஷ்மீர் மக்களுக்குக் கோரிக்கை

ஸ்ரீநகர், செப். 9

காஷ்மீருக்கு விஜயம்செய்துள்ள இந்திய உல்லாசப் பிரயாண, விமான சேவை மந்திரி டாக்டர் கரண்சிங், அப்பகுதியில் வாழும் மக்களை இன, மத பேதமின்றி ஒற்றுமையாக வாழும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர் காஷ்மீர் வானொலியில் நேற்று ஒலிபரப்பிய செய்தியொன்றில், மதச் சார்பற்ற கொள்கையைக் கடைப்பிடிக்குமாறும், அதை வலுப்படுத்துமாறும் காஷ்மீர் மக்களைக் கோரினார்.

### நல்லெண்ணம் அவசியம்

மற்றமா நிலங்களைப் போல, காஷ்மீரிலும் சில சிக்கலான பிரச்னைகள் இருக்கத்தான் செய்கின்றன என்றும், ஆனால் இப்பிரச்னைகளைத்தீர்ப்பதற்கு நல்லெண்ணமே அவசியமாகுமென்றும் டாக்டர் கரண்சிங் வலியுறுத்தினார்.

சர்வதேச உல்லாசப் பிரயாணிகள் வருடம் இம்மாதம் கொண்டாடப்படவிருப்பதாகவும், ஆயிரத்துக்கதிகமான உல்லாசப் பிரயாணிகள் காஷ்மீர் வருவார்களென எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறிய டாக்டர் கரண்சிங், அவர்கள் மகிழ்ச்சியுடன் தங்கிநிற்கும் சூழ்நிலையை [illegible] வாக்க முய[illegible] என்று கேட்டுக்கொண்டார்.

## ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபன மாநாடு

### யூ தாண்ட் செல்கிறார்

நியூயோர்க், செப். 9

ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தின் உச்சி மாநாட்டின் இறுதிக் கட்டக் கூட்டத்தில் கலந்து கொள்ளத் தாம் கான்ஷாஷாவுக்குச் செல்லவிருப்பதாக ஐ. நா. பொதுக் காரியதரிசி யூ தாண்ட் இங்கு அறிவித்துள்ளார்.

அவர் அடுத்த செவ்வாயன்று கான்ஷாஷாவுக்குச் செல்வார். கொங்கோ ஜனாதிபதி திரு. மொபுட்டுவின் அழைப்பை ஏற்றே தாம் அங்கு செல்வதாக யூ தாண்ட் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில். தான்ஸானியா ஜனாதிபதி திரு. நைரேரே, உள்நாட்டில் நிலவும் நெருக்கடியை முன்னிட்டுத் தாம் ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தின் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாதிருப்பதாக அறிவித்துள்ளார்.



## வெள்ளத்தினால் ஒரிஸ்ஸாவில் 19 பேர் உயிரிழந்தனர்

### பீகாரிலும் 8 பேர் மரணம்

புபனேஷ்வர், செப். 9

ஒரிஸ்ஸாவில் வெள்ளப் பெருக்கினால் 19 பேர் உயிரிழந்துள்ளனர். மற்றும் 15 பேர் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

பீஹாரில் வெள்ளத்தினால் 8 பேர் இறந்துள்ளனர்.

மேற்கு வங்காளத்தில் ஒரு மாவட்டத்தில் நெல்வயற் காணியில் 60 சதவீதம் வெள்ளத்தில் அமிழ்ந்துள்ளது.

வேறு இடங்களில் ஏற்பட்ட வெள்ளத்தினால், சுமார் 2,500 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பல்லாயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்துள்ளன. ஏறத்தாழ 50,000 பேர் வீடிழந்துள்ளனர்.

## தென் ஆபிரிக்காவில் சோவியத் ஒற்றர் கைது

பிரிடோரியா, செப். 9

தென் ஆபிரிக்கப் பந்தோபஸ்து படையினர், ஒரு சோவியத் ஒற்றரைக் கைது செய்துள்ளதாகத் தென் ஆபிரிக்கப் பிரதமர் திரு. ஜே. வோஸ்டர் அறிவித்துள்ளார்.

இந்த மாதிரி ஒரு ஒற்றர் கைது செய்யப்படுவது, தென் ஆபிரிக்காவிலே இது தான் முதற் தடவை என அறியப்படுகிறது.

## நோபல் சமாதானப் பரிசு பெற்றவர்கள்

### வியட்னாம் சமாதான முயற்சி

ஒஸ்லோ, செப். 9

வியட்னாமில் போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும், வியட்னாம் சமாதான முயற்சியை மேற் கொண்டுள்ள நோபல் சமாதானப் பரிசு பெற்றவர்களின் கோஷ்டியொன்றை வரவேற்கத் தாம் தயாராகவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இத் தகவலை இங்குள்ள நோர்வே வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது. இச் சமாதான முயற்சி, நோர்வே அரசாங்கத்தின் ஆதரவுடன், மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இந்தச் சமாதானத் தூது கோஷ்டிக்கு பிரிட்டனைச் சேர்ந்த திரு. பிலிப் என் பேக்கரும், பெல்ஜியத்தைச் சேர்ந்த ஒருவரும் தலைமை தாங்குவார்களெனத்தெரிய வருகிறது.

### வாஷிங்டனில் வரவேற்பு

இந்தச் சமாதான தூது முயற்சியை, அமைக்கராஜாங்க வெளியுறவு மந்திரி திரு. டீன் ரஸ்க் வாஷிங்டனில் வரவேற்றுள்ளார். வியட்னாமில் போரை நிறுத்தும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் எந்த முயற்சிக்கும் அமெரிக்காவின் ஆதரவு எப்போதும் இரு

(4-ம் பக்கம் பார்க்க)

## லண்டனில் தேசாய்

லண்டன், செப். 9

இங்கிலாந்துக்கு விஜயம் செய்துள்ள இந்திய துணைப் பிரதமரும், நிதி மந்திரியுமான திரு. தேசாய், நேற்று பிரிட்டிஷ் பொருளாதார உயர் அதிகாரிகளுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.

பிரிட்டிஷ் பொருளாதார மந்திரி திரு. கலகன், அயல்நாட்டுப் பொருளாதார அபிவிருத்தி மந்திரி, இங்கிலாந்து வங்கியின் கவர்னர் ஆகியோரைச் சந்தித்து திரு. தேசாய் பேசினார்.

டிரினிட்டில் நடைபெறவிருக்கும் சாம்ராஜ்ய நாடுகளின் நிதி மந்திரிகள் மாநாட்டில் எழக்கூடிய பிரச்னைகளையிட்டுத் திரு. தேசாய், பிரிட்டிஷ் பொருளாதார மந்திரி திரு. கலகனுடன் கலந்து பேசியதாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அங்கவீனர் விடுதியை திருத்துவர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சர்வதேச பொது நல சேவைச் சங்கத்தின் ஆதரவில் பண்ணை அங்கவீனர்களின் விடுதியை சிரமதான மூலம் அவர்கள் வசதிக்கேற்ப திருத்தியமைப்பதற்குஜேர்மனியைச்சேர்ந்த ஒரு ஆணும் ஒரு இளம் பெண்ணும் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணம் பொதுநல சேவைச் சங்கத்தின் உதவியுடன் பண்ணை அங்கவீனர்களின் விடுதியை எதிர்வரும் 11-ம் திகதி திருத்தவேலையிலும் சுத்திகரிப்புவேலையிலும் ஈடுபடுவார்கள் எனத் தெரிகிறது.

## மீனவர் குடியேற்றம்
### எஸ்.ஜே.வி.க்கு முறைப்பாடு

பண்டத்தரிப்பு, சனி

இளவாலை சேந்தான் குளப்பகுதியில் மயிலிட்டிப்பகுதியைச் சேர்ந்த மீனவர்சிலர் குடியேறியிருப்பதால் இப்பகுதியைச் சேர்ந்தமீனவர்கள்இக் குடியேற்றப் தமதுதொழிலையும் குடும்பங்களையும் பாதிப்பதாக காங்கேசன்துறை எம்.பி. திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகத்திற்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

சேந்தான்குளக் கரைப் பகுதியில் குடியேறிய மயிலிட்டி மீனவர் வாடிகள் வீடுகள் கட்டுவதிலும் காணிகளைத் துப்புரவு செய்வதிலும் இப்போது கவனம் செலுத்தி வருகின்றனர். கடல் தொழிலுக்கான மீன் பிடி வள்ளங்களும் இங்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

## சாரணர் விழாவும் காட்சிகளும்

புன்னாலைக்கட்டுவன், சனி

வலிகாமம் வடக்கு கிழக்குப பகுதிகளைச் சேர்ந்த சாரணர்விழாவும் காட்சிகளும் நாளை கோப்பாய் கிறிஸ்தவக ல்லூரி மைதானத்தில் நடை பெறவிருக்கிறது. இதில் பொருட் காட்சி, மரத்திற் குடிசை வழியாக்கற் பயிற்சி, பாலங்களமைத்தல், பிரதம சிகிச்சை வன நடனங்கள் ஆகியன இடம்பெறும். இரவு 7 மணிக்குப் பாசறைத் தீ நடைபெறும்.

## விசேஷ விசாரணைக்கு உத்தரவு

ஊர்காவற்றுறை, சனி

நெடுந்தீவுமத்தியைச்சேர்ந்த லோறன் தோமஸ் [வயது 46] என்பவர் கழுத்தில் வெட்டப்பட்டு இறந்தது சம்பந்தமாகவிசாரணை செய்த நீதிபதி திரு. ஐமீல் தனதுதீர்ப்பைஒத்திவைத்து விசேஷ பொலிஸ் விசாரணை நடத்துமாறு உத்தரவிட்டார்.

## நோபல் . . .

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

ந்து வருமென அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், வியட்னும் போர் நிறுத்தத்துக்கு ஐ. நா. மூலம் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் பற்றித் திரு. டீன் ரஸ்க், ஐ.நா. அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து வருவதாகக் கூறப்படுகிறது.

### பிரிட்டிஷ் அபிப்பிராயம்

திரு. ரஸ்கின் இந்தச் சமாதான முயற்சி நடவடிக்கைகள், வியட்னும்போரிலிருந்து அமெரிக்கா தன்னை விடுவித்துக் கொள்ள ஜோன்சன் நிர்வாகம் எவ்வளவு ஆர்வம் அக்கறை கொண்டுள்ளது என்பதைக் காட்டுவதாக அமைந்துள்ளன என பிரிட்டிஷ் அரசியல் வட்டாரங்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளன.

## பூநகரியும் பரீட்சை ஸ்தானமாகும்

— நமது நிருபர் ந. சூரியகுமாரன் —

பூநகரி, சனி

பூநகரி வட்டாரத்தைச் சேர்ந்த மாணவ மாணவிகள் க. பொ. த. [சா] தேர்வை எழுதுவதற்கு இவ்வளவு காலமும் சாவகச்சேரிப்பரீட்சை நிலையத்திற்கேசென்றுவந்தனர். பஸ் சேவை சீரில்லாமலிருந்ததால் ஒவ்வொரு நாளும் பரீட்சை நிலையத்திற்குச் சென்று வர முடியாது கஷ்டமுற்றனர். வள்ளத்தில் சென்று பரீட்சை நேரத்திற்குப் போகமுடியாமல் தவித்தனர். வாடகை வீடுகளில் தங்கிப் பெரும்இன்னல்கள் அனுபவித்தனர். குறிப்பாக பெண் பரீட்சார்த்திகள் தங்கியிருந்து பரீட்சைஎழுதுவதிற்பெருங கஷ்ட முற்று வந்தனர் 1967-ம் ஆண்டுடிசம்பர் பரீட்சைமுதல் பூநகரியும் ஒரு பரீட்சை நிலையமாக்கப்பட்டுள்ளதாகவும் பூநகரி மகா வித்தியாலயம் பரீட்சை ஸ்தானமாக்கபடும் எனவும் நம்பப்படுகின்றது. பூநகரி மகா வித்தியாலயத்தையும் பரீட்சை ஸ்தானமாக்க வேண்டுமென அதன் அதிபர் திரு. மு. சிவானந்தம் முயற்சி எடுத்து வந்தது குறிப்பிடத்தக்கது.

### புதிய நிர்வாகிகள்

பூநகரி உழவர் மகா மன்றம் பொதுக் கூட்டம் மகேஸ்வரி வித்தியாசாலையில் திரு.வி. வல்லிபுரம் தலைமையில் நடைபெற்றது. இந்த உழவர் மகா மன்றம் உழவர்களின் நலனைக் கவனிப்பதற்காக நிறுவப்பட்டது.

புதிய நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:- தலைவர்- திரு. வி. வல்லிபுரம், உ.தலைவர்- ஆர். சிவரத்தினம், காரியதரிசி-பி. தர்மலிங்கம், தனாதிகாரி- என். இராமலிங்கம்.

ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

### நள்ளிரவில் வீட்டில் நுழைந்தாராம்

கிளிநொச்சி இ.போ.ச பஸ் டிப்போவைச் சேர்ந்த ஒரு பஸ் கொண்டக்டர் பூநகரி வில்லடியைச் சேர்நத ஏ.பொன்னையா என்பவரின் வீட்டிற்குள் புகுந்து அறையினுள் செல்ல எத்தனித்தபோது வீட்டிலுள்ளவர்கள் குரலெழுப்பி அயலவரைக் கூப்பிடவே குறிப்பிட்ட நபர் ஓடிவிட்டதாக பூநகரிக் காரியாதிகாரியிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

### கலை விழா

பூநகரி வட்டாரப் பாடசாலைத் தலைமை ஆசிரியர்களின் கூட்டம் வட்டார வித்தியாதரிசி திரு. பி. எஸ். குமாரசாமி தலைமையில் நடைபெற்றது. செப்டம்பர் பதினைந்தாம் திகதியில் வட்மாரத்தின் எல்லாப்பாடசாலைகளின் நிகழ்ச்சிகளைக் கொண்ட கலை விழா ஒன்றை நடத்துவது என இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இக்கலை விழாவில் தெரிவு செய்யப்படும் நிகழ்ச்சிகள் கிளிநொச்சித்தொகுதி இறுதிக்கலை விழாவின்போது இடம் பெறுமெனவும் பூநகரியில் புதிதாக அமைக்கப்பெற்ற மகாவித்தியாலயத் திறந்த வெளி அரங்கில் இக்கலைவிழா நடைபெறுமெனவும் தெரிகிறது. கலை விழா குழுவிற்கு தலைவராக திரு. மு.சிவானந்தமும், செயலாளராக திரு. க. [illegible] மும், பொருளாளராக திரு. பொ.தம்புவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## மீண்டும் வாழைக்குலைத் திருட்டு

புன்னாலைக்கட்டுவன், சனி

ஊரெழுப் பகுதியில் மீண்டும் திருட்டுகள் தலைதூக்கியுள்ளன. முக்கியமாக வாழைக்குலைகள் அதிகமாகத் திருடப்பட்டுவருவதாகத் தெரிகிறது. தொண்டர்படை தொடர்ந்து கடமையைச்செய்து வந்தபோதிலும், திருடர்களின் கைவரிசை தொடர்ந்து நடைபெறுகிறது.

## விஞ்ஞானக் கருத்தரங்கு

புன்னாலைக்கட்டுவன், சனி

அடுத்த மாதம் 10-ம் திகதி வடமாகாண விஞ்ஞான ஆசிரியர்சங்க ஆதரவில் நீரியல்அளவை ஆராய்ச்சி பற்றி நடக்கவிருக்கும் கருத்தரங்கில் திணைக்கள மேலதிகாரிகள் பலர் பங்குபற்றுவரெனத் தெரிகிறது. இவ்வதிகாரிகள் தொண்டமானாறு நீரியல் ஆராய்ச்சியிலும் கலந்துகொள்ளவிருப்பதாகத் தெரிறது.

## தீவுப் பகுதியில் கோர வரட்சி

வேலணை, சனி

தீவுப் பகுதியில் மழையின்மையால் கொடிய வரட்சி ஏற்பட்டுள்ளது. இதனுல் பெரும்பாலான பகுதிகளில் குடிநீர் கஷ்டமேற்பட்டுள்ளது காய்கறி போன்ற பயிர்களும் கைவிடப் பட்டு கருகிய தடிகளாகக் காட்சியளிக்கின்றன. கால் நடைகள் தினம் மாண்டு கொண்டிருப்பதும்மக்களிடையே கவலையை அதிகரித்துள்து. குளங்கள் வரண்டு விட்டதால் குடிக்க நீரின்றியும் உண்ண உணவின்றியும் கால் நடைகள் மடிகின்றன.

## 14 மாத கடூழியம்
### ஜீவனும்சம் கட்டத் தவறினுர்

ஊர்காவற்றுறை, சனி

சுருவில் வாசியான மனுவல்பிள்ளை நீக்கிலாப்பிள்ளை என்பவர் அவரது மனைவி மேரி திரேசாவுக்குத் தாம் கட்டவேண்டிய ஜீவனும்சப் பணம்கட்டாதகுற்றத்திற்கு ஊர்காவற்றுறை நீதிபதி அவருக்கு 14 மாதம் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

### ரயில்வே குமாஸ்தாக்கள் சங்க நிர்வாகிகள்

காலி, சனி

அகில இலங்கை ரயில்வே குமாஸ்தாக்கள் சேவை சங்கத்தின் ஏழாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் காலி நகர மண்டபத்தில் நடைபெற்றபோது பின் வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப் பட்டனர். தலைவர்- திரு. பி, சி.டி.சமரசேகரா, (மீண்டும் தெரிவு) உபதலைவர்கள்- திருவாளர்கள்: எம். வி. ஜெயசேகரா, ஜி. வாதுகே, எச். டபிள்யூ. டி. சில்வா, காரியதரிசி- திரு. எம். ராமசுந்தரா [மீண்டும் தெரிவு] உப காரியதரிசிகள்- திருவாளர்கள்: எஸ். சத்யபாலா, ஏச். ஏச். குணவர்த்தன, தனாதிகாரி- திரு. ஏ. பி. எம். ஏ. காதர். உபதனாதிகாரி- திரு. ஈ. என். சேனநாயகா, திரு. டீ. சிறீசேன, சஞ்சிகை ஆசிரியர்- திரு. பி. ஜே. சோமபாலா. [illegible] மத்திய கமிட்டி ஒன்றும் தெரிவு செய்யப் பட்டது.

## ஆலயநிர்வாகிகள்

உடுப்பிட்டி, சனி

வதிரி பூவற்கரை விநாயகராலய பரிபாலன சபையின் வருடாந்த மகாநாடு ஆசிரியர் திரு. ஆ. ம செல்வத்துரை தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாகக் கீழ்க் காண்டோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. ஏ. கந்தவனம். உபதலைவர் திரு.ஏ வி. சுப்பிரமணியம், காரியதரிசி திரு. எஸ். கே. இராசேந்திரன், தனாதிகாதரிதிரு.எம். சுப்பிரமணியம், மனேஜர் திரு. கே. சரவணமுத்து.

பத்துப் பேரடங்கிய நிர்வாகசபை யொன்றும் தெரிவு செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் ஆலய ஸ்தாபகர்களில்ஒருவரான காலஞ்சென்ற திரு. கே. எம். சின்னத்தம்பியின் மறைவிற்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக இரு நிமிடம் அஞ்சலி செலுத்தப் பட்டது.

### சனசமூக நிலைய உத்தியோகத்தர்கள்

காங்கேசன்துறை, வெள்ளி

பன்னுலை தெல்லிப்பழை கணேச சனசமூக நிலைய16-வது வருடாந்த பொதுக் கூட்டம் தலைவர் வே. கந்தையா தலைமையில் நடைபெற்றது. பின் வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப் பட்டனர்.

தலைவர்- திரு. வே. கந்தையா, உபதலைவர்கள்- சு. ஆறுமுகம், கா. கதிர்காமத்தம்பி. செயலாளர்கள்- சி. சிவபாலசுப்பிரமணியம், சி. சிவபுண்ணியம். தனாதிகாரி- சி. சின்னத்தம்பு. கணக்குப் பரிசோதகர்-கா, திருநாவுக்கரசு ஏழு அங்கத்தவர்களைக் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

### ரத்மலானையில் உயிரியல் வனம்

கொழும்பு, சனி

ரத்மலானையில் உயிரியல் வனமொன்றை உருவாக்க ராஜாங்க அமைச்சு திட்டமிட்டுள்ளது.

தெகிவளை மிருகக்காட்சி சாலையிலுள்ள மிருகங்களுக்கு உணவு அளிப்பதில் ஏற்பட்டுவரும் செலவைக்குறைக்கும் முயற்சியாகவே இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

35 ஏக்கர் நிலத்தில் இந்த வனம் உருவாக்கப் படும். இதன் ஆரம்பவேலைகளுக்கென ரூ 15,000செலவிடப்படவிருக்கின்றது.

## பண்டாரகமவுக்கு பிரதமர், சிறிமா விஜயம்

கொழும்பு, சனி

பண்டாரகம இடைத் தேர்தல் பிரசார வேலைகளில் ஈடுபடுவதற்காக பிரதமர் டட்லி சேனநாயகாவும் எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயகாவும் அங்கு விரைவில் விஜயம் செய்யவிருக்கின்றனர்.

திரு. டட்லி வரும் 16-ம் திகதி அங்கு விஜயம்செய்யவிருக்கிறுர். திருமதி சிறிமா 15-ம் திகதி விஜயம்செய்வாரெனத் தெரிகிறது. இன்னும் சுமார் இரு வாரங்களில் பண்டாரகம தேர்தல் நடைபெறவிருக்கிறது.

### நல்ல உப்பு விளைச்சல்

கொழும்பு, சனி

உப்பு கூட்டுத்தாபனம் இந்த வருடத்தில் 50,000 தொன் உப்பை உற்பத்தி செய்துள்ளது. வருடமொன்றுக்கு வீட்டுப் பாவிப்பிற்கு இலங்கைக்கு 70,000 தொன் உப்பு தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ஞாயிறு 10-9-67

[செய்திகள் காலை 7-00 பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00]

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை—வி. சிவஞானம், 6-40 கத்தோலிக்க நற்சிந்தனை சங்கைக்குரியபிதாஎம். ஜி. அல்பிரட், 6-45 துதிப் பாடல்கள், 7-25 தினக் குறிப்பு, 7-30 குரல்வகை. 7-45 திரை இசை. 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 எங்கள் அதிதி.

இரவு 6-15 நாடோடிப் பாடல்கள், 6-30 நேயர் கடிதங்கள், 6-45 கிறிஸ்தவ ஆராதனை, 7-15 பாட்டு த. சோமசுந்தரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 மாதர் வேட்டவை.

ராதா மணிமார்க்

சந்தனுதித் தைலம்

கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச் செய்யும்.

தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனுல் தலையிடி, கபாலஇடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல்தைலம்.

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-
ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)

ஏகவிநியோகஸ்தர்கள்:-

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

[மருந்து, மருந்துச்சரக்கு வாசனுதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

53, கே. கே. எஸ். றேட். பெரியகடை, யாழ்ப்பாணம்.
''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மீசாலை இசைவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு மீசாலை தமிழிசைச் சங்க இசைவிழாவில் பி. ப. 6-45 மணிக்கு செல்வி செல்வரத்தினம் இளையதம்பியின் வீணைக்கச்சேரியும், இரவு 7-30 மணிக்கு திரு. அ. க. ஐயாக்கண்ணு தேசிகரின் பாட்டுக்கச்சேரியும். 9-15 மணிக்கு திரு. எஸ். பரம்தில்லைராஜாவின் பாட்டுக்கச்சேரியும் இடம்பெறும் திரு. பேரம்பலம் செல்லையா சிறப்புரை நிகழ்த்துவார்.

நாளை

பி. ப. 6-45 திரு. எம். கே. பஞ்சாபிகேசன் — நாதஸ்வரம், 8-00 திருமதி பூமணி இராசரத்தினம் — பாட்டு, 9-30 திரு என். சண்முகரத்தினம்-பாட்டு.

## இலங்கை - இந்திய கூட்டு முயற்சி

கொழும்பு, சனி

தேயிலையின் ஏற்றுமதியை அதிகரிப்பதோடு விலையையும் உயர்த்தும் முயற்சியில் இலங்கையும் இந்தியாவும் கூட்டாக இயங்குவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி இந்தியாவில் இலங்கை தூதுகோஷ்டி ஆலோசனை நடத்தவிருக்கிறது. பொருளாதார விவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி டாக்டர் காமினி கொரியா தலைமையிலமைந்த தூதுகோஷ்டி இந்திய அதிகாரிகளை புதுடில்லியில் அடுத்த வாரம் சந்திக்கும்போதே இதுபற்றி ஆராயும்.

## சிவானந்தன் வெற்றிக்கேடயம் சைனிங் ஸ்டார் சுவீகரித்தது

திருக்கோணமலை, சனி

திருக்கோணமலை சைனிங் ஸ்டார் விளையாட்டுக்கழகத்தினரால் நடாத்தப்பெற்ற "டாக்டர் சிவானந்தன்" அறைகூவற் கேடய கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு வைபவமும் சென்ற சனிக்கிழமை மாலை 4-30 மணிக்கு திருக்கோணமலை மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு. எம். ஈ. பி. எல். பெரேரா தலைமையில் நடைபெற்றது. இவ் வைபவத்தில் திருக்கோணமலை எம். பி. திரு. சு. ம. மாணிக்கராசாவும் கலந்து கொண்டார்.

இவ்வைபவத்தில் முதலாவதாக திரு. எம். ஈ. பி. எல். பெரேராவுக்கு கழக கௌரவ பொதுச் செயலாளர் திரு. கோ. சி. இக்னேஷியஸ் மலர்மாலை அணிவித்தும், திருமதி பெரேராவுக்கு செல்வி கோகுலமணி தெட்சணாமூர்த்தி மலர்ச் செண்டு வழங்கியும் வரவேற்றார். அடுத்து கழகக் கொடியை திரு. பெரேரா ஏற்றி வைத்தார்.

அடுத்து இறுதிப் போட்டியில் கலந்து கொண்ட சாம்பல்தீவு வளர்தாரகை கோஷ்டியினரையும் சைனிங் ஸ்டார் நீலம் கோஷ்டியினரையும் பிரதம விருந்தினரான திரு. பெரேராவுக்கு கழகத் தலைவர் திரு. ந. சிங்காரவேலு அறிமுகம் செய்து வைத்ததுடன் இறுதிப் போட்டி ஆரம்பமாகியது. இந்த இறுதிப்போட்டிக்கு திரு. ஏ. அரியநாயகம் மத்தியஸ்தம் வகித்தார். இப்போட்டியில் 2—1 ஆட்டங்களால் சைனிங் ஸ்டார் கோஷ்டியினர் வெற்றியீட்டினார்கள்.

போட்டி முடிவில் கழகத் தலைவர் திரு. ந. சிங்காரவேலு பரிசளிப்பு வைபவத்திற்கு சமுகம் தந்தவர்களை வரவேற்று சிற்றுரை ஆற்றினார். அடுத்து பிரதமவிருந்தினரான திரு. பெரேரா ஆற்றிய உரையில் சைனிங் ஸ்டார் விளையாட்டுக்கழகத்தினர் தம்மையும் பாரியாரையும் இவ்வைபவத்தில் கலந்து கொள்ள அழைத்தமைக்கு நன்றி கூறியதுடன் சைனிங்ஸ்டார் விளையாட்டுக் கழகத்தினர் சிறிய இடத்திற்குள் ஒரு கைப்பந்தாட்ட மைதானத்தை அமைத்து, இப்படியான ஒரு சுற்றுப் போட்டியை நடாத்தி அதன் இறுதிப் போட்டியையும் பரிசளிப்பு வைபவத்தையும் இவ்வளவு திறமையாக நடத்தியதையிட்டுத் தாம் பெருமைப்படுவதுடன், இவ்வளவு ஒழுங்குடனும் திறமையாகவும கழகத்தை வழிநடத்தும் கழக செயற்குழுவினரையும் பாராட்டினார். இப்படியான விளையாட்டுத்துறை வைபவங்களுக்குத் தாம் தம்மாலான எவ்வித உதவிகளையும் செய்ய என்றும் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார். அடுத்து கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டிய கோஷ்டிகளுக்கு திருமதி பெரேரா பரிசில்களை வழங்கினார்.

பரிசுபெற்ற கோஷ்டிகளின் விபரம்: சைனிங் ஸ்டார் நீலம் கோஷ்டியினர் சாம்பியன் கோஷ்டியாகத் தெரிவு செய்யப்பெற்று டாக்டர் சிவானந்தன் அறைகூவற் கேடயத்தை சுவீகரித்துக் கொண்டார்கள். கோஷ்டிக்கப்டன்: சு. வ. வேலுப்பிள்ளை.

சாம்பல்தீவுவளர்தாரகை "ஏ" கோஷ்டியினர் இரண்டாவது இடத்தைப்பெற்று, சைனிங்ஸ்டார் வி. க. தலைவர் திரு. ந. சிங்காரவேலு ஆகியோரின் அறைகூவல் வெள்ளிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டார்கள். கோஷ்டிக் கப்டன் பா. அ. தேவமணி.

சல்லி உதயசூரியன் "ஏ" கோஷ்டியினர் மூன்றுவது இடத்தைப் பெற்று சைனிங் ஸ்டார் வி. க. கௌரவ உப செயலாளரும், உபபொருளாளருமான திரு. ந. பழனிவேலின் அறைகூவல் வெள்ளிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டார்கள். கோஷ்டிக்கப்டன் மா. குட்டிராசா.

## மிருதங்க அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மறைந்துகிடக்கும் மிருதங்கக்கலைக்குப் புத்துயிர் அளித்து அதன் பெருமைகளை வெளிக்கொணர சிறுவர்களே முன்னிற்பதாக நேற்று முன்தினம் மாலை நாவற்குழி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற செல்வன் பாலசுந்தரம், செல்வி காந்திநாயகி ஆகியோரது மிருதங்க அரங்கேற்றவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் மாவட்ட நீதிபதி திரு. தம்பித்துரை கூறினார்.

திரு. க. இராசலிங்கம், திருமதி பூமணி வேலுப்பிள்ளை ஆகியோரது இசைக் கச்சேரியும் இடம்பெற்றது.

## நினைவுமலர்

உடுப்பிட்டி, சனி

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி இராணி சாரணரான வல்வெட்டியைச்சேர்ந்த காலஞ்சென்ற செல்வன் சி. இரவீந்திரன் [வயது 21]. கண்டியில் நடைபெற்ற சாரணர் விழாவில் கலந்துவிட்டு வீடு திரும்புகையில் வவனியாவிற்கும் ஓமந்தைக்குமிடையில் புகையிரதவிபத்தில் சிக்கி மரணமானதற்கு அனுதாபம் தெரிவிக்கும்முகமாக மேற்படி கல்லூரிச் சாரண ஆசிரியர்களினாலும், சாரண மாணவர்களினாலும் நினைவு மலரொன்று வெளியிடப்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்

### கல்வி

வகுப்புகள்:

மத்திய எழுதுவினைஞர், போஸ்மாஸ்ரர் - சிக்னலர், சுகாதார பரிசோதகர் பரீட்சை வகுப்புக்களுக்கு பிரவேசங்கள் இப்பொழுது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி. 2349

வகுப்புகள்

ஆங்கிலத்தில் தாம்குறைந்தவர்களுக்கு விசேட பயிற்சி வகுப்புகள். தாமதமின்றி உடனே சேர்ந்துகொள்ளுங்கள். ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி/107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 2348

### தேவை

பெண்நெசவாளர்:

பயிற்சியுள்ள பெண் நெசவாளர்கள்தேவை. விபரங்களுக்கு எழுதவும்: "சுதர்ஸ்" நெசவு நிலையம், 44 ஆஸ்பத்திரிவீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 2352

சேல்ஸ்மென்

சுவெப்ஸ் குளிர்பானங்கள், தேயிலை ஆகியவை சைக்கிளில் சேல்ஸ் செய்வதற்கு இளைஞர்கள் தேவை. நேரில் சந்திக்கவும், நந்தி இன்டஸ்றீஸ், 20, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 2353

## 'அஞ்சாமை, சுதந்திர உணர்வுக்கு வித்திட்ட பெரியார்'

### கந்தமுருகேசனார்பற்றி கா. பொ. இரத்தினம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"என்றும் அழியாத எமது கன்னித்தமிழ்மொழிக்கு பல பெரியார்கள் பேச்சளவில்தான் தொண்டு செய்துள்ளார்கள் ஆனால் உண்மையில் தொண்டாற்றிய அறிஞர்கள் மிகச் சிலரே. இந்த மிகச்சில பெரியார் வரிசையில் திரு. கந்தமுருகேசனாரும் ஒருவர். இப்பெரியார் பேச்சளவில் நில்லாமல் தமிழ் மொழி வளர்ச்சிக்குச் செயலளவில் அரும்பாடு பட்டவராவார். அப்படிப்பட்ட ஒரு பெரியாருக்கு ஒரு நினைவுப் பள்ளி உருவாகுவது மிகப் பொருத்தமானதே.'

தமிழ்த் தொண்டர் கந்தமுருகேசனார் ஞாபகார்த்தமாக ஓர் இலவசபள்ளிக்கூடத்தை அமைக்கும் பொருட்டு யாழ்ப்பாணம் மனோகரா படமாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிதியுதவி விழாவுக்குத் தலைமைதாங்கிப் பேசிய

[6-ம் பக்கம் பார்க்க]

## தரம் உயர்வு

மீசாலை, சனி

மீசாலை வீரசிங்கம் வித்தியாசாலை அடுத்த ஆண்டு ஜனவரியிலிருந்து மகாவித்தியாலயமாகத் தரம்உயர்த்தப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டிலிருந்து இது வீரசிங்கம் மகாவித்தியாலயம் என வழங்கும். பழுதடைந்தநிலையில் காணப்படும் கட்டடத்தை வெகுவிரைவில் திருத்திஅமைப்பதற்கும் கல்வி இலாகா ஒப்புக்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

## மந்திரிக்கு மகஜர்

வேலணை, சனி

தீவுப்பகுதியில் 22,000 ஏக்கருக்குக் கூடுதலான கடல்நீர் உட்புகுந்தும் தரிசாகவும் பயிர் செய்ய இயலாது வீணாகக் கிடப்பது குறித்து 3000 க்கு அதிகமானோரின் கையொப்பங்களுடன் காணி நீர்ப்பாசன மந்திரிக்கு மகஜர் ஒன்று க. செல்லப்பாவினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.


இப்பொழுது நடைபெறுகிறது

கெபிடல் [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை] விஜயா [மட்டுநகர்]

விஜிதா [ஹட்டன்] மொடர்ன் [பதுளை] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

புதுமையான கதை! உணர்ச்சிமிக்க வசனம்!
காதிற்கினிய பாடல்கள்!
முழுவதும் ஒரு ஹாஸ்ய விருந்து!

ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், நாகேஷ், விஜயலட்சுமி, ரத்னா, மாதவி நடித்த



நாம் மூவர்

டைரக்ஷன்: ஜம்பு பாடல்கள்: வாலி இசை: என்.எம்.எஸ்.

2-வது மாதம்

கிங்ஸ்லி [கொழும்பு] வெம்பிளி [கண்டி]

மற்றும் 4 திரைகளில்

எம். ஜி. ஆர். — சரோஜாதேவி நடித்த

அன்பே வா

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
Daily at 4-45, 7-00, 9-45 p. m.
Pre-Poya & Poya 10-30 a. m.
OPERATION WHITE SHARK
with Franco Polesello as Secret agent A. D. 3
Cinema Scope - Colrno

REGAL JAFFNA
Time: 4-30 7-00 p. m. 9-45 p. m.
Audid Murphy
Ben Cooper
in
Gun Fight at Comanche Creek

MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7-00 & 9-45
William Holden
Audrey Hepburn
in
PARIS WHEN IT SYZZIES

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர்.
தொழிலாளி

ராணி சினிமா
[யாழ்ப்பாணம்]
அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க
மீண்டும் திரையிடப்படுகிறது!
தேவன் அழகக்கோன்
ஞேசாரியோ பீரிஸ், பாலன், சந்திரகலா, இந்திரா, வசந்தா
மற்றும் பலர் நடித்த
தங்கமணி பிக்சர்ஸ்
டாக்ஸி ட்ரைவர்
(முற்றிலும் இலங்கை நடிகர்கள், கலைஞர்களைக் கொண்டு இலங்கையிலேயே தயாரித்த ஓர் ஒப்பற்ற திரை ஓவியம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'என் முடிவி'ல் இருப்பது...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
திரு. கல்யாணராமனைக் குறுக்கு விசாரணை செய்தபோது திரு. கல்யாணராமன் அக்கடிதத்தில இருப்பது ராதாவின் கையெழுத்துத்தான் எனத் தெரிவித்தார். முதல் பக்கத்திலிருப்பது போன்று கையொப்பம்மற்றப் பக்கங்களிலிருக்கவில்லையெனவும், ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருப்பதாகவும் ராதவின் வழக்கறிஞர் வாதாடியபோதே திரு. கல்யாணராமன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனவரி 12ந்திகதியன்று சூட்டுச்சம்பவத்தின் பின் ராதா- எம்.ஜி. ஆர். ஆகியோரின் வாக்குமூலங்களை ராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் வைத்துப் பதிவுசெய்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஜனார்த்தனன் சாட்சியமளிக்கையில் சூட்டுச்சம்பவம் என்ன நேரத்தில் நடைபெற்றது எனத்தாம் எம். ஜி.ஆரைக் கேட்கவில்லையென்றும், 10 வரிகள் கொண்ட வாக்குமூலத்தை எம். ஆர். ராதா தந்தார் என்றும் தெரிவித்தார்.

இந்த வாக்குமூலத்தில் ராதா கையொப்பமிட முடியாத நிலையிலிருந்தார். அவர் தேகநிலை சரியாகவில்லையென டாக்டர் அறிவித்திருந்தார். எம்.ஜி. ஆர். வாக்குமூலத்தைத் தொடர்ந்தே நான் ராதாவைக் கைது செய்தேன் என்றும் கூறிய திரு. ஜனார்த்தனன் எம். ஜி. ஆரின் வீட்டினுள் ராதாவை சந்தித்ததாக முத்துநாடார் என்பவர் தம்மிடம் சொல்லவில்லையென்றும் 'எனது முடிவு' என்ற கடிதம் சம்பந்தமாகத்தாம் பிரஸ்தாபிக்கவில்லை என்றும் சொன்னார்.

முத்து நாடாரென்பவரே ராதாவை ஆஸ்பத்திரிக்குக் கூட்டி வந்தாரெனவும், அவரது சுவெட்டரில் இரத்தக்கறை படிந்திருந்ததாகவும் சாட்சிகூறினார்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஜனார்த்தனன் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

## அக்: 15-க்கு...

[1 ம் பக்கத் தொடர்ச்சி]
தோடு, விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் திட்டம் பற்றி அந்தந்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விளக்கவேணடுமென வும் தெரிவிக்கப்பட்டது. ஒவ்வொரு விவசாயிகளுக்கும், தேவையான பணத்தை விவசாய மேற்பார்வையாளர்களின் உதவியுடன் அந்தந்த பல நோக்கக் கூட்டுறவுச்சங்கங்களுக்கூடாக விண்ணப்பிக்க வேண்டுமெனவும், விண்ணப்பங்களை அப்பகுதி விவசாய விஸ்தரிப்பு உதவி ஆணையாளரும், கூட்டுறவுப்பகுதி உதவி ஆணையாளரும் பரிசிலனை செய்தபின்னர், அவர்கள் அந்த விண்ணப்பங்களை வங்கிகளுக்கு அனுப்பி அனுமதிபெற்று பின்னர் விவசாயிகளுக்குக் கடன் வழங்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்குத் தேவையான முக்கோண வடிவமுள்ள மண்வெட்டிகள் போதியளவு கைவசம் இருப்பதாகவும், கைவசமில்லாத பல நோக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவுப் பகுதியுடன் தொடர்புகொண்டு பெற்று, விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்றும் இங்கு தெரிவிக்கப்பட்டதோடு, ஒவ்வொரு பகுதி கிராம சேவையாளர்களுடன் சுகாதாரப் பரிசோதகர்களும் ஒத்துழைத்து கிராமங்கள் தோறும் வீட்டுத் தோட்டங்கள் அமைக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது. [ந. நி.]

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இல த்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10-ந் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

## சங்கானையில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]
சங்கானைச் சம்பவங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டபின்னர் சங்கானையில் சமாதானத்தையும் அமைதியையும் நிலைநாட்ட வேண்டிய அத்தியாவசியம்பற்றிப் பொலிஸ் அதிபர் வலியுறுத்தினர்.

இதுசம்பந்தமான பிரச்னைகளை விரிவாக ஆராயும் பொருட்டு இம்மாதம் 15ம் திகதி புதன்கிழமை மாலை 3 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையில் ஒரு மகாநாடு நடாத்த வேண்டுமென்றும்அதன்பின்னர் அமைதியான முறையில் சங்கானையில் பிரசாரம் செய்து தேநீர்க்கடைகளில் சகலருக்கும் தேநீர் வழங்குவதற்கான வழிவகைகளைக் கையாள வேண்டுமென்றயாழ். பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்தின் யோசனையை சபையினர் ஏற்றுக் கொண்டனர்.

இப்பிரச்னை சம்பந்தமாக அரசியல் கலப்பற்ற முறையிலும் நிரந்தரமான ஒரு முடிவையும் மேற்கொள்வது அமைதிக்கு அடிக்கல்லாகவிருக்குமென திரு. சி. க. திருச்சிற்றம்பலம் கருத்துத் தெரிவித்தார்.

## அஞ்சாமை . , .

[5-ம் பக்கத் தொடர்ச்சி]
கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், முன்னர் தமிழ் மக்கள் போத்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்ற அந்நியரினால் ஆளப்பட்டு அடிமைத்தனத்தில் ஊறிக்கிடந்தனரென்றும், இந்நிலையிலிருந்த தமிழ்மக்களின் அறிவைத் தெளியச் செய்து, மனித சுதந்திர உணர்வையும் அஞ்சாமையையும் திரு. கந்தமுருகேசனார் ஏற்படுத்தினாரென்றும், எனவே இப்பெரியாரின் நினைவுப்பள்ளிக்கு பொதுமக்கள் தமது முழு ஆதரவையும் மனமுவந்து அளிக்கக் கடமைப்பட்டவர்களெனவும் சொன்னார். (வி. நி.)

## தொலைபேசி இல்லாததால் தொல்லை

வேலணை, சனி

சரவணை உபதபாற் கந்தோருக்கு தொலைபேசிவசதி இன்மையால் சரவணைக் கிராமமக்கள் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகவேண்டியிருப்பதாகத் தெரிகிறது. இந்த உபதபாற் கந்தோர் ஆரம்பிக்கப்பட்டு 15 வருடங்களுக்கு மேலாகியும் இன்னமும் தொலைபேசி சதியில்லாமலிருப்பது இப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியைத் தோற்றுவித்துள்ளது.

## அடித்து பறித்தாராம்

பூநகரி, சனி

பிரம்படியைச் சேர்ந்த திருமதி எஸ். கனகசுந்தரம் என்பவர் 2500 ரூபா கொண்டு சென்றபோது கருவேலடி ஒழுங்கையில் வைத்து ஒரு வாலிபன் அப்பெண்ணைத் தாக்கிப் பணத்தைப் பறித்துச் சென்று விட்டதாகப் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

## பஸ் விபத்தில் வயோதிப மாது

உடுப்பிட்டி, சனி

மந்திகையில் பஸ் விபத்தில் சிக்கிய வயோதிப மாது ஒருவர்அபாயகரமான நிலையில் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. பிரஸ்தாப விபத்தில் சம்பந்தப்பட்ட இ. போ. ச. கடுகதி பஸ் வண்டி பொலிஸ்நிலையத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. விபத்து நடந்த இடத்தைப் பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. வீ. செல்லையா நேரில் சென்று பார்வையிட்டார். விசாரணை நடைபெறுகிறது.

## ரப்பர் விலை வீழ்ச்சி

காலி, சனி

ரப்பரின் விலை பெரிதும் வீழ்ச்சியடைந்துள்ளதால் ரப்பர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. சில ரப்பர் தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்குவது முதலாளிகளுக்கும் பெரும் கஷ்டமாக இருக்கிறதாம். இவ்வித நிலையால் தொழிலாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். சில ரப்பர் தோட்ட முதலாளிகள் தமது ரப்பர் தோட்டங்களில் வருமானம் தரக்கூடிய வேறு பயிர்களைப் பயிரிடுவதுபற்றி யோசித்து வருவதாகஅறியப்படுகிறது.

## தீவுப்பகுதியில் பாரதி விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த சரவணை சனசமூக நிலையம் நாளை மாலை தீவுப்பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினம் தலைமையில் பாரதி விழாக்கொண்டாடவுள்ளது.

புங்குடுதிவு இளைஞர் கழகமும் எதிர்வரும் 14-ம் திகதி புங்குடுதீவில் பாரதிவிழா கொண்டாடுவதற்கு நடவடிக்கை எடுத்துவருகிறது. இவ்விழாவுக்கு வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம் தலைமை வகிப்பார். [வி. நி.]

## ஐந்துவருட திட்டத்தில்மாற்றம்

கொழும்பு, சனி

வெளிநாட்டிலிருந்துஇறக்குமதி செய்யப்படவேண்டிய பல உபகரணங்கள் இறக்குமதியாவதில் தாமதமேற்பட்டுள்ளதால் நீர்ப்பாசன இலாகாவின் ஐந்தாண்டுத் திட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்படவேண்டியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின்கீழ் நீர்ப்பாசனஇலாகா மேலும் சுமார் 3,50,000 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்வதற்கு வழி அமைக்கவிருக்கிறது.

## மாந்தை கி. ச. உபதலைவர்

மாந்தை, சனி

மாந்தை மேற்கு கிராம சபையின் புதுவருட உபதலைவராக திரு. ஜெ. மு. செயினுல்ப்தீன் மீண்டும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். இவரது பெயரைஇப்பதவிக்கு திரு. ச. சவேரியன் பிரேரித்தார். திரு. பே. சவுரி ஆமோதித்தார்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

மூதூர் கடிதம்

# வீடமைப்புத் திட்டம் செயல்படுகிறது

மூதூர்ப்பட்டினசபையின் வீடமைப்புத் திட்டத்திற்காக உள்ளூராட்சி அமைச்சால் வழங்கப்பட்டுள்ள நியுதவியைக் கொண்டு வீடமைப்புத் திட்டம் அமைக்கப்படவிருக்கிறது. ஆதறகான கேள்விப்பத்திரங்களை தற்சமயம் பட்டினசபையார் கோரியுள்ளனர். இவ்வீட்டுத் திட்டம் "வட்டம்" எனப்படும் குடியேற்றப்பகுதியில் அமைக்கப்படவுள்ளது.

இவ்வித வீடமைப்புத் திட்டத்துக்கு தாம் உதவியளித்துள்ளதாயும் இத்திட்டத்துக்கான வேலைகள் இன்னும் சில நாட்களில் ஆரம்பமாகலாம் என கடந்த மாதம் 28-ந் திகதி பட்டின சபையாரின் வரவேற்பு உபசாரத்தில் பேசிய உள்ளூராட்சி மந்திரி தெரிவித்திருந்தார். மந்திரியளித்திருந்த உறுதி வெகு விரைவிலேயே காரியப்படுவதையிட்டு இப்பகுதி மக்கள் சந்தோசம் அடைந்துள்ளார்கள். இதே போன்று கிண்ணியா பட்டினசபைக்கும் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

கிண்ணியா பட்டின சபையாரும் இதற்கான கேள்விப்பத்திரங்களை விரைவில் கோரவிருப்பதாகஅறியப்படுகிறது.

### விவசாயிகளுக்கு கடன்

மூதூர்ப் பகுதியில் உள்ள கூட்டுறவுச் சங்க விவசாயிகள் அனைவருக்கும் இம் மாதம 15ம் திகதி முதல் கடன்கள் வழங்கப்படவுள்ளதாய் அறியவருகிறது. இதற்கான சகல வேலைகளும் ஏற்கனவே பூர்த்தியாக்கப்பட்டு விட்டதாம். ஏறத்தாழ 5லட்சம்ரூபாய் கொட்டியாபுரப் பற்று பகுதியில் கூட்டுறவு வங்கி மூலமாய் கொடுக்கப்படவுள்ளது. இதற்கான அனுமதிகளை இப்பகுதியிலுள்ள சகல கூட்டுறவு சங்கங்களும் பெற்றுள்ளன எனஇப்பகுதி கூட்டுறவு பரிசோதகர் ஒருவர் நமது நிருபரிடம் நேற்றுத் தெரிவித்தார்.

இதற்கிடையில் இக்கடன்கள் கூட்டுறவு வங்கியின் மூலம் நிச்சயமாய்க் கொடுபடுமா என்பது சந்தேகத்தில்தான் உள்ளது. காரணம் தற்சமயம் தொடர்ந்து 2 மாதங்களுக்கு மேலாக வேலை நிறுத்தம் செய்து வரும் திருமலை மாவட்ட வங்கி ஊழியர்கள் தமது நிலையைத் தளர்த்தியதாய் தெரியவில்லை. மூதூர்க்கிளை வங்கியிலோ கிளை வங்குக் காசாளரும் நகை ஈடு பிடித்தலுக்கு பொறுப்பாளரும் இரும்புப்பெட்டி சாவிகளை இன்னும் ஒப்படைக்கவில்லைஎனத் தெரிகிறது. ஒரு தொகையான காசு வைக்கப்பாதுகாப்பான இரும்புப்பெட்டி எங்கிருந்து பெறுவது என்ற கேஅவி எழுந்துள்ளது. இந்த நிலையில் கந்தளாய் அல்லைப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் குறிப்பிட்ட பணத்தை திருமலை மக்கள் வங்கிமூலமாக கொடுக்கும் படிமேலிடங்களைக் கேட்டு வருகிறார்கள் எனவும் தெரிகிறது.

## பொலிஸுக்கு புகார்

பூநகரி, சனி

கிளிநொச்சி மார்க்கெட்டில் சிலர் மது அருந்தி விட்டு சூதாட்டத்தில் ஈடுபடுவதாகவும் பெண்களுக்குத் தொல்லை தருவதாகவும் கிளிநொச்சிப்பொலிசுக்கு முறையிடப்பட்டுள்ளது.

# மலேரியா

## மீண்டும் பரவுகிறதாம்

கொம்பனித்தெரு, வெள்ளி

இலங்கையில் சிறிது காலம் தலைகாட்டாதிருந்த மலேரியா நோய் மீண்டும் நாட்டின் பலபகுதிகளிலும் தோன்றியுள்ளதாக அறியப்படுகின்றது. இதுவரை இலங்கையின் பலபகுதிகளிலும் 781 பேருக்கு மலேரியாக் காய்ச்சல் பீடிக்கப்பட்டிருப்பதாகவும் இந்நோய் மிக வேகமாக பரவிவருவதாகவும் மீண்டும் இந்நோயை முற்ருக ஒழிப்பதற்குச் சுகாதார பகுதியினர் அதிசிரத்தை எடுத்துவருவதாகவும் தெரிகிறது.

## மாலைதீவுக்கு விமான சேவை

கொழும்பு, வெள்ளி

இலங்கைக்கும் மாலைதீவுக்குமிடையில்இன்று விமான சேவை சம்பந்தமாக ஒரு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

இவ்வுடன்படிக்கையின் படி எயர்சிலோன் தினசரி மாலைதிவுக்குவிமான சேவை நடத்தும். அதுபோலவே மாலை தீவு விமான சேவை ஆரம்பித்தவுடன் அந்த விமானங்கள் இங்கு வந்து போக உரிமை வழங்கப்படும்.

## "சிறையே சிறந்தது"

ஊர்காவற்றுறை, வெள்ளி

இளைஞர் ஒருவர் தனக்குச் சிறைத்தண்டனை விதிக்குமாறு நீதிபதியிடம் கேட்டுக்கொண்டார். இச்சம்பவம் ஊர்காவற்றுறைக் கோர்ட்டில் நடந்தது எதிரியான இவ்விளைஞரை 3 வருடம் சீர்திருத்தப் பாடசாலைக்குச் செல்லுமாறு நீதிபதி கூறியபோதே அவர் தம்மைச் சிறைக்கு அனுப்புமாறு நீதிபதியைக் கேட்டுக்கொண்டார்.

நாரந்தனையைச் சேர்ந்த ஈச்சங்காடு வாசியான ஜோ. சின்னராசா என்ற 15 வயது இளைஞர் 15 ரூபா திருடியதாக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கை விசாரணை செய்த நீதிபதி திரு. ஜமீல் எதிரியைக் குற்றவாளியாகக்கண்டு, மூன்று வருடம் சீர்திருத்தப் பாடசாலைக்கு எதிரியை அனுப்பக் கட்டளையிட்டார்.

எதிரி சின்னராசா சீர்திருத்தப்பாடசாலைக்குத் தன்னை அனுப்பாது தனக்கு மறியல் தண்டனை வேண்டுமென நீதிபதியிடம் கோரினார். இவரின் கோரிக்கையை நீதிபதி நிராகரித்து எதிரியைச் சீர்திருத்தப் பாடசாலைக்கு அனுப்பக் கட்டளையிட்டார்.

## திறப்புக்கோர்வை யாருடையது?

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு முன்னால் திறப்புக் கோர்வையொன்று பாலசண்முகதேவன்என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.

[இந்தப் பக்கத்திலுள்ள சில செய்திகள் நேற்றைய சிலபதிப்புகளில் வெளிவந்தவை].

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org